**கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**அசல் வழக்கு எண்.208/2019**

**இ.ம.எண்.03/2025**

1) V.காமாட்சி

2) R.V.சங்கர்

3) V. ரமணி

4) V.செந்தில் குமார்

5) R.V.ரெங்கராஜன் **...மனுதாரர்கள்/வாதிகள்**

**/எதிர்/**

1) மாவட்ட ஆட்சியர், கரூர்.

2) தனிவட்டாட்சியர் நகர நிலவரித்திட்டம், குளித்தலை.

3) ஆணையர் குளித்தலை, நகராட்சி.

4) பாஸ்கர்

5) லெட்சுமிபிரியா

6) அகிலாண்டேஸ்வரி **...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இம்மனு எனது முன்னிலையில் கடந்த 13.10.2025ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R.பாலகுமார் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. K.S.M.சாகுல் அமீது அவர்கள் முன்னிலையாகியும், 4 முதல் 6 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு. M.பரமசிவம் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பில் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

## உத்தரவு

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6, விதி 17ன் கீழ் மனுதாரர்/வாதியால் மேற்படி வழக்கின் வழக்குரையை திருத்தம் செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2) மனுதாரர் தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்துள்ள திருத்துதல் விவரத்தில் கண்டுள்ள விவரப்படி, அசல் பிராதை திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. இந்த திருத்தலால், வழக்கின் சாராம்சம் மற்றும் வழக்கு மூலத்தில் எவ்வித மாறுதலும் ஏற்படாது. இந்த மனுவை அனுமதிப்பதால், பிரதிவாதிகளுக்கு எவ்வித கஷ்டமும், நஷ்டமும் இல்லை. இந்த மனுவை அனுமதிக்காவிட்டால், மனுதாரருக்கு கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும். எனவே, இம்மனுவில் கூறியுள்ள திருத்துதல் விவரப்படி மேற்படி அசல் வழக்கில் திருத்தம் செய்யவேண்டும். எனவே, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 5 மற்றும் 6ம் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்மனுவுரையின் சுருக்கம்:**

3) மனுதாரரின் மனு பொய்யானது, மோசடியானது, கற்பனையானது. மனுதாரர் கோரியிருக்கும் பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல. மனுதாரரின் மனு அபிடவிட் ஒரு முழுமையடையாத நிலையில் உள்ளது. இம்மனுதாரர் அசல் வழக்கில் எந்த நம்பர் வாதியாக உள்ளார் என்றும், அனைத்து வாதிகளுக்கும் சேர்த்து தானே இந்த பிராமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்வதாகவும், எந்த பரிகாரத்திற்காக தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எதுவும், தெளிவாக குறிப்பிடாமல் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

4) இந்த திருத்தல் செய்யப்படுவதால் வழக்கின் சாராம்சங்கள் மாறாது என குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் ஏற்புடையதல்ல. ஏனெனில், பட்டா வழங்கப்பட்ட காலத்தில் தனி வட்டாட்சியர் நத்தம் நகர நில வரித் திட்டம் என குறிப்பிட்டு பதவியின் நிலை காட்டப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டு, தற்சமயம் வட்டாட்சியர், குளித்தலை

என்று மட்டும் திருத்தம் செய்யவேண்டும் என மனு செய்து இருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல.

**5)** மனுவிற்கான அடிப்படை முகாந்திரம் எதுவும் சட்டப்படி எழவில்லை. அசல் வழக்கானது, இந்நீதிமன்றம் ஒரு தீர்வு காணும் நிலையில், மேற்படி தீர்வை நிறைவேற்றும் முகமாக சரியான ஒரு அலுவலரின் பதவி குறித்தும், தெளிவான ஒரு குறிப்பேட்டில் இருந்தால் மட்டுமே வழக்கின் தீர்வில் எவ்வகையான பரிந்துரைகள் ஏற்பட்டாலும், அதை சரிசெய்துகொள்ள ஏதுவாக இருக்கும் என்பதை புரிந்துகொள்ளாமல், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6)** மனு அபிடவிட் உரிமையியல் நடைமுறைச் சட்ட விதிமுறைகளுக்கு புறம்பாகவே உள்ளது. ஒரு அபிடவிட் என்பதில் சொல்லப்பட வேண்டிய சாராம்சங்கள் அனைத்தும் முழுமை பெற்றிருக்க வேண்டும் என பல்வேறு உயர்நீதிமன்ற மற்றும் உச்சநீதிமன்ற தீர்ப்புகள் எடுத்துக்காட்டியுள்ளது. மனுதாரரின் மனு இயந்திரத்தனமாகவும், பெயரளவிலும் ஒரு முழுமை பெறாத நிலையில் உள்ளது. எனவே, இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது.

**7) 1 முதல் 3 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்னிலையாகிய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர், 1 முதல் 3 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுவுரை எதுவும் இல்லை என்று குறிப்பு செய்துள்ளார்.**

<u>**தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:**</u>

**8)** மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?

<u>**சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**</u>

9) இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் இல்லை. சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

<u>**தீர்வு:**</u>

**10)** வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பிலும் வாதங்கள் கேட்கப்பட்டது. மேற்படி வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில், மேற்படி வழக்கானது

மனுதாரர்/வாதியால் பிரதிவாதி/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. இந்நிலையில், மேற்படி வழக்கின் 2ம் பிரதிவாதியாகிய தனி வட்டாட்சியர், நகர நில வரித் திட்டம், குளித்தலை என்ற பதவியானது தற்சமயம் இல்லை என்றும், தற்போது வட்டாட்சியர் மட்டுமே உள்ளார் என்றும் கூறி ஒரு குறிப்பாணையானது, 2ம் பிரதிவாதி தரப்பு முன்னிலையாகிய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரால், கடந்த 23.07.2025 அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிகிறது.

11) மேற்படி குறிப்பாணைக்கு, மனுதாரர்/வாதி தரப்பில் அப்போது ஆட்சேபனை செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி குறிப்பாணையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை நிரூபிக்கும் பொருட்டு, 1 முதல் 3 வரையான பிரதிவாதிகள் தரப்பில் குளித்தலை நகர நில அளவையரை இந்நீதிமன்றத்தில் கடந்த 30.07.2025 அன்று முன்னிலைபடுத்தப்பட்டது. மேற்படி குறிப்பாணையில் உள்ள விபரங்கள் பற்றி, குளித்தலை நகர நில அளவையரிடம் வினவியபோது, மேற்படி வழக்கின் 2ம் பிரதிவாதியின் பதவி தற்போது இல்லை என்றும், மேற்படி பதவியானது மாவட்ட வருவாய் அலுவலரால் நத்தம் நகர நில வரித் திட்டத்தின் கீழ் வேற்றுப் பணிக்காக ஏற்படுத்தப்பட்டு அவரின் பதவியானது கடந்த 2015ம் வருடமே முடிந்துவிட்டதாகவும், தற்சமயம் அவ்வாறு பதவி எதுவும் இல்லை என்றும் கூறியுள்ளார்.

12) அதன் அடிப்படையிலும், மேற்படி குறிப்பாணையின் அடிப்படையிலும் இந்நீதிமன்றத்தால் மேற்படி வழக்கின் 2ம் பிரதிவாதியின் பதவியானது, தற்சமயம் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டு, மேற்படி வழக்கின் வாதிக்கு தற்சமயம் பதவி வகிக்கும் அலுவலரான வட்டாட்சியரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க நடவடிக்கை எடுக்கக் கோரி, மேற்படி வழக்குரையை திருத்தம் செய்ய அறிவுறுத்தியதன் அடிப்படையிலேயே இம்மனுவானது, மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டிருப்பது தெரிகிறது.

13) மாறாக, 4 முதல் 6ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்மனுவுரையில், மேற்படி மனுவில் கண்ட விபரங்கள் முழுமையடையாத நிலையிலும், இயந்திரதனமாகவும், பெயரளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், ஒரு பிராமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட வேண்டிய சாராம்சங்கள் அனைத்தும் முழுமை பெறாமல்

இம்மனுவில் இருப்பதாகவும் கூறி ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. 1 முதல் 3 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் எதிர்மனுவுரை இல்லை என்று குறிப்பு செய்துள்ளார்.

**14)** இந்நிலையில், மனுதாரரின் பிராமாண வாக்குமூலம் மற்றும் மனுவினை பரிசீலனை செய்கையில், மேற்படி பிராமாண வாக்கு மூலத்தில் அவர் கூறியுள்ள சங்கதிகள், 4 முதல் 6 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் சொல்லியுள்ளபடி முழுமை பெறாமல் இருப்பது தெரிகிறது. ஆனால், மேற்படி மனு திருத்துதல் விபரத்தில் மேற்படி வழக்கில் திருத்தப்பட வேண்டிய சங்கதிகள் மனுதாரரால் சொல்லப்பட்டுள்ளது என்பதும் தெரிகிறது. இவ்வாறு இருக்கையில், மேற்படி வழக்கின் 2 ம் பிரதிவாதி தரப்பில் முன்னிலையாகிய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தாக்கல் செய்த குறிப்பாணை அடிப்படையிலும், அதனை பொறுத்து மேற்படி 2 ம் பிரதிவாதியின் பதவி தற்சமயம் இல்லை என்பதை இந்நீதிமன்றம் உறுதி செய்த பின்னிட்டும், இந்நீதிமன்றத்தின் அறிவுறுத்தலின் பெயரிலும், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிகிறது.

**15)** இதுமட்டுமல்லாமல், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிராமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் முழுமை பெறாத நிலையில் இருப்பினும், மேற்படி கோளாறுகளால் இம்மனுவை அனுமதிக்காவிட்டால், மேற்படி வழக்கில் சரியான தரப்பினர்களை சேர்க்காமல் இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் எவ்வகையான உத்தரவுகளும், இவ்வழக்கு தரப்பினர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், இம்மனுவை அனுமதிக்காவிட்டால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்டமும், நஷ்டமும் ஏற்படபோவது இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

**முடிவு:**

முடிவாக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ம் தேதியாகிய இன்று என்னால் அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2025.10.24 14:45:56 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**குளித்தலை**

| | | |
|---|---|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் | – | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் | – | இல்லை |

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2025.10.24 14:46:02 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**குளித்தலை**